முடியவில்லையென்று ஒரு பத்திரிகையில் செய்தி வந்திருக்கின்றது. எது எப்படியிருந்தாலும் இதுபோன்ற சமயங்களில் அரசு முன்னெச்சரிக்கையாக, அந்தத் திருவிழாக்கள் நடைபெறுகின்ற இடங்களில் தீயணைப்பு வண்டிகளை நிறுத்த வேண்டும். அனைத்து வசதிகளையும் செய்துதர வேண்டும்.

பலியான குடும்பங்களுக்கு எங்களுடைய கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, பலியானவர்களின் குடும்பத்தினருக்கு அரசு நிவாரணம் தர வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், வீரபாண்டி கோயில் திருவிழாவில் ஏற்பட்ட துயரம் மிகுந்த இந்தச் சம்பவத்தில் இறந்துவிட்டவர்களுடைய குடும்பத்திற்கும், காயம்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றவர்களுக்கும் என்னுடைய இரங்கலையும், ஆறுதலையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தச் சம்பவம் குறித்து, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் அந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு. அழகராஜா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கணேசன் அவர்களும், அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் திரு. வேலாயுதன் அவர்களும், புதிய தமிழகம் சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. சுந்தரம் அவர்களும் இரங்கல் தெரிவித்திருப்பதோடு, இதுபோன்ற நிகழ்ச்சிகளில் அரசு செய்திட வேண்டிய கடமையினையும் உணர்த்தியிருக்கின்றார்கள்.

அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் மூலமாகக் கிடைத்துள்ள செய்தியினை முதற்கண் இந்த அவையிலே வைக்க விரும்புகின்றேன்.

தேனி மாவட்டம், வீரபாண்டியிலே உள்ள கௌமாரியம்மன் கோயில் திருவிழா கடந்த 11-5-1999 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. நேற்று 17-5-1999 மாலை 4-45 மணியளவில், அக்னி tea stall — tea stall-க்குப் பெயரே அக்னி tea stall — அந்த கடையினுடைய

மாஸ்டர் கணேசன் என்பவர் மண்ணெண்ணெய் air stove-ல் pump செய்தபோது மண்ணெண்ணெய் வெளியே வந்து burner-ல் தீப்பிடித்துச் சூடாகும் சமயம் ஒருவர் வந்து தனக்கு டீ கேட்ட நேரத்தில், மேற்படி கணேசனுடைய கவனம் திசை திரும்பி stove-ஐக் கவனிக்காமல் விட்டுவிட்டதால் கூடுதலான மண்ணெண்ணெய் வெளியேறி, அதனால் தீப்பிடித்து அவரது தென்னை ஓலையால் வேயப்பட்ட கூரையிலே அந்தத் தீ பரவி, காற்று அதிகமாக வீசிய காரணத்தால் அருகிலுள்ள கடைகளுக்கும் தீ மளமளவென்று பரவியுள்ளது என்றும், பக்கத்திலேயிருந்த சிறுசிறு கடைகளெல்லாம் தீயில் உடனடியாக எரிந்துள்ளன. பெரும்பாலும் வளையல் கடைகள், பிளாஸ்டிக் பொருட்கள் விற்கும் கடைகள், பழக் கடைகள், உணவுப் பொருட்கள் விற்கும் கடைகள்தான் எரிந்துள்ளன.

கோயில் சார்பாக 100 கடைகள்தான் ஏலம் விடப்பட்டுள்ளன. ஆனால் 300 கடைகள் எரிந்துவிட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. எல்லாம் தற்காலிகக் கடைகள் என்பதால், அதிக மதிப்புள்ள பொருட்கள் நாசமாகி இருக்க முடியாது என்றும் கூறப்படுகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவரின் மதிப்பீட்டின்படி, சுமார் 20 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் நாசமாகியிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 9-5ப

இந்த விபத்தில் மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் இறந்திருக்கின்றார்கள். மற்றொருவர் இறந்திருக்கிறார். அவர் ஆணா, பெண்ணா என்று அடையாளம் தெரியாத அளவுக்கு உடல் கருகிய நிலையிலே அந்தச் சடலம் இருக்கின்றது. பத்திரிகையொன்றில் 15 பேர் இறந்ததாக வந்துள்ள செய்தி தவறானது என்பதை அந்தப் பத்திரிகையாளர்களே காலையில் தொலைபேசி மூலமாக என்னுடைய செயலகத்திற்குத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த விபத்திலே மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளார்கள். அதில் ஒருவருக்கு 50 சதவீதக் காயமும, மற்றொருவருக்கு 55 சதவீதக் காயமும, இன்னொருவருக்கு 15 சதவீதக் காயமும் ஏற்பட்டுள்ளது. மூவரும் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். 50 சதவீதத்திற்கு மேற்பட்ட காயம் அடைந்தவர்களை, உள்ளபடியே மிகுந்த சிரமத்திற்கிடையிலேதான் பிழைக்க வைக்க முடியும் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 மே 18

கோயிலுக்கும் தேருக்கும் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. தேரில் இருந்த அம்மன் சிலை, உடனடியாக ஊராட்சி அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பாதுகாப்பாக வைக்கப்பட்டது. விழாவின் கடைசி நாள் இன்று என்பதால் உடனடியாக அம்மன் சிலை தேருக்கு இன்று காலையிலே எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டு கோயிலுக்குச் சென்று விழா முடிந்து, கொடிக் கம்பத்திலிருந்து கொடி இறக்கப்பட வேண்டும் என்று ஊர்க்காரர்கள் வலியுறுத்தியதன்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை அதிகாரிகளும் அங்கு முகாமிட்டு, அதற்கான பணிகளையும் மற்றும் தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டுள்ளார்கள். நேற்று இரவும் இன்று காலையும் சுமார் 1,800 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீட்டு அளவை சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அலுவலர்கள் கணக்கிட்டுக் கொண்டுள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக அந்த இடத்திலேயே முகாமிட்டுள்ளார். இன்று பிற்பகல் அறநிலையத் துறை அமைச்சரும் அங்கே நேரடியாகச் செல்ல இருக்கின்றார்.

விழா நடைபெற்ற இடத்திலே வைக்கப்பட்டிருந்த ஒரு தீயணைப்பு வண்டியுடன் மேலும் நான்கு தீயணைப்பு வண்டிகளையும் உடனடியாக வரவழைத்து, தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. தற்பொழுது அங்கே எந்தவிதமான பதற்றமும் இல்லையென்று செய்திகள் வந்துள்ளன.

இந்த நிகழ்வுகளைக் கணக்கிட்டு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் தருகின்ற விவரத்தின்படி, அரசின் சார்பிலே முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்படும் என்று தெரிவிப்பதோடு, முதல் கட்டமாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.